# ஜாலான் மலாயு மேம்பாட்டு திட்டம் நிறைவு பெற வேண்டும் - அமைச்சர் அறைகூவல்




கோலாலம்பூர், பிப். 5-
மார்ச் மாதம் ரமலான் தொடங்குவதற்கு முன்பாக ஜாலான் மலாயு சாலை மேம்பாட்டு திட்டத்தை நிறைவு செய்யுமாறு கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்கு பிரதமர் இலாகா அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அண்மையில் இந்த சாலை மேம்பாட்டு பகுதிக்கு பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வருகை தந்திருந்தார். இதனை பிறகு கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா இத்திட்டத்தை தனிப்பட்ட முறையில் மறு ஆய்வு செய்தார். ஜாலான் மஸ்ஜிட் இந்தியா சுற்று வட்டார வர்த்தக பகுதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது. கோலாலம்பூர் மாநகர் மன்றம் களமிறங்கி காரியமாற்ற வேண்டும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் ஜனவரி 10 ஆம் தேதியன்று வேண்டுகோள் விடுத்திருந்தார். இதன் பிறகு கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஓர் அறிவிப்பினை செய்தது. மேம்பாட்டு திட்டத்தின் தரத்தை உயர்த்தப்பட்ட பிறகு ஜாலான் மலாயு மற்றும் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவை சுற்றியுள்ள அங்காடிக் கடைகள் எல்லாம் புதியதோர் தோற்றத்தை பெற்று மிடுக்காக விளங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.